**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திரு. P. ரஞ்சித்குமார், பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,**
**சத்தியமங்கலம்.**

**2026 ம் வருடம் ஏப்ரல் மாதம் 2 ஆம் நாள் வியாழக்கிழமை**

**சி.எம்.பி. எண். 492 /2025**

**in**

**குற்ற எண். 419 /2025**

P.செல்வகுமார்
த/பெ.பழனிச்சாமி,
2/3,அய்யன்சாலை,
பூசாரிபாளையம். ..... மனுதாரர்/ உரிமையாளர்

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
சத்தியமங்கலம் காவல் நிலையம்,
குற்ற எண். **419 /2025** ....எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்.

மனுதாரர்/உரிமையாளர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை இந்நீதிமன்றம் கடந்த 15.11.2025-ம் தேதியன்று கோப்பிற்கு எடுத்துள்ளது. மனுதாரர்/உரிமையாளர் தரப்பில் மனுதாரரே ஆஜராகியுள்ள நிலையிலும், எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும் இம்மனு எதிருரை இவ்வழக்கு கட்டு ஆகியவற்றை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர்/உரிமையாளர் தரப்பில் இம்மனுவானது குற்ற எண்.**419 /2025** ன் கீழ் சத்தியமங்கலம் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்ட மனுதாரர்/ உரிமையாளருக்கு சொந்தமான ஆட்டினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட்டு மனுதாரர்/உரிமையாளருக்கு இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடவேண்டி பிரிவு 497 BNSS –ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டது.

**2.மனுதாரர்/ உரிமையாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

மனுதாரர் மேற்படி மனுவில் மனுதாரர்/ஆட்டின் உரிமையாளர் என்றும், மனுதாரர் மேற்படி முகவரியில் வசித்து வருவதாகவும் மனுதாரர் நான்கு ஆடுகள் மற்றும் இரண்டு மாடுகள் வைத்து வந்ததாகவும், கடந்த 22.07.2025-ம் தேதி இரவு 10.00 மணிக்கு ஆடு மற்றும் மாடு தண்ணீர் காம்பித்து மனுதாரர் தூங்க சென்றுவிட்டதாகவும், பின்பு இரவு 01.00 மணிக்கு மனுதாரர் நாய்கள் உளைக்கும் சத்தம் கேட்டு மனுதாரரும் அவரது அப்பாவும் வெளியே வந்து பார்த்த போது பட்டியில் ஒரு ஆட்டை காணவில்லை என்றும் அதை யாரோ திருடி சென்று விட்டார்கள் என்றும் பின்னர் மறுநாள் காலை 23.07.2025 தேதி சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக புகார் அளித்ததின் பெயரில் சத்தியமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.419/2025 வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வந்தனர் என்றும் பின்னர், கடந்த 20.08.2025-ம் தேதி எதிரிகளை கைது செய்தும் மனுதாரரது ஆட்டை மீட்டனர் என்றும். பின்னர் மனுதாரரின் ஆட்டை கனம் குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்படைத்து வழக்கு சொத்தாக்கினர் என்றும் ஆதலால் புகார்தாரரது ஆட்டை தந்து வழங்க உத்திரவிடுமாறு மனுத்தாக்கல் செய்துள்ளார்.

**3.எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.**

எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் மேற்படி வழக்கில் மனுதாரருக்கு சொந்தமான ஆட்டுகிடாய் மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க ஆட்சேபணை இல்லை என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.தீர்வு**

மனு ஆவணங்கள், அரசு தரப்பு எதிருரை மற்றும் மனுதாரர் தரப்பு வாதம் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் மனுசொத்தான ஆட்டுக்கிடாய் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு PR No. 187/2026 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்தானது ஆடாக இருப்பதால் அதன் பராமரிப்பை கருத்தில் கொண்டும்

"Suderbhai Ambalal Desai Vs State of Gujarat 2002 Supp (3) SCR 39" என்ற வழக்கில் மாண்பமை உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ள மேற்கோள்களை கருத்தில் கொண்டும், மேற்படி மனுசொத்தான ஆட்டுக்கிடாய் ஒன்றை கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் மனுதாரர் வசம் இடைக்காலமாக கொடுப்பது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**நிபந்தனைகள்:**

1. மனுதாரர் மனுச்சொத்திற்காக தான் ரூ.9,000/- சொந்த பிணைமுறி இயற்றிக் கொடுக்க வேண்டும்.

2. மனுச்சொத்தான ஆட்டினை போட்டோ எடுத்து இவ்வழக்கில் தாக்கல் செய்ய வேண்டும்.

3. மேற்படி மனுசொத்தான ஆட்டினை விற்க கூடாது. இந்நீதிமன்றம் கேட்கும் போது இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

4. தலைமை எழுத்தர் பஞ்சநாமா தயார் செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவேண்டும்.

மேற்படி நிபந்தனைகளின் பேரில் மனுதாரர் வசம் மனுச் சொத்தினை இடைக்காலமாக கொடுக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02-ம் தேதி உத்தரவு பகரப்பட்டது.

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.04.02 17:30:15 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.